சி.எஸ்.ஐ. சென்னைப் பேராயம்
**தூய பவுல் ஆலயம்,** சூளை, சென்னை-600 112.

# தூய பவுல் ஆலய புனரமைப்பு கடந்து வந்த பாதை

**ஆயர் அருள்திரு. எஸ்.சாமுவேல் - புனரமைப்பு அறிக்கை - 26.04.2026**

“ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார். அதனால் நாம் பெரு மகிழ்ச்சியுறுகின்றோம்.” (திருப்பாடல் 126:3) என்ற திருமறை வசனத்திற்கேற்ப கடவுள் நம்முடைய ஆலயப் புனரமைப்புப் பணியில் செய்த பெரிய காரியங்களையும், அவருடைய வழிநடத்துதலையும் கடந்து வந்த பாதையையும் திருச்சபை மக்கள் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம்முடைய ஆலயப் புனரமைப்புப் பணி கடந்து வந்த பாதையைக் குறித்து திருச்சபையாராகிய உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தருணத்தில் இந்த வாய்ப்பை எனக்களித்த என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு முதற்கண் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். புனரமைப்பு செய்யப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க இத்தூய பவுல் ஆலயத்தை இறை ஒப்படைப்பு செய்து வைத்திருக்கின்ற நமது அன்புப் பேராயர் பேரருட்திரு.**A.பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** ஐயா அவர்களுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேராயரோடு இணைந்து அனைத்துத் திருப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதோடு, பெண்கள் வாரியத் தலைவராகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டி ருக்கின்ற நமது பேராயரம்மா அருட்திரு.**இந்திராபால்** அவர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பேராயர் அவர்களும், பேராயரம்மா அவர்களும் நமது தூய பவுல் ஆலயத்தில் ஐந்து ஆண்டுகள் ஆயராகப் பணியாற்றி பல சாதனைகளைப் புரிந்துள்ளார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. அவர்கள் இன்று நமது பேராயராகக் கடவுளால் உயர்த்தப்பட்டு, நமது ஆலயத்தை இறை ஒப்படைப்பு செய்து வைப்பது கடவுள் நமக்குக் கொடுத்த பெரிய அருட்கொடையாகும்.

## வரலாற்றுப் பின்னணியம்

நான் என்னுடைய பகிர்வை நம் திருச்சபை வரலாற்றுப் பின்னணியத்தோடு தொடங்க முயல்கிறேன். 1855-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதி அடிக்கல் நாட்டப்பட்ட நம் ஆலயம் 1858-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ஆம் தேதி இறை ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேலும் 1858-ஆம் ஆண்டு நவம்பர் 18-ஆம் நாள் **“தூய பவுல் ஆலயம்”** என்ற பெயர் நம் ஆலயத்துக்குச் சூட்டப்பட்டது.

168 ஆண்டுகால விசுவாசப் பயணத்தில் நமது திருச்சபை பல மாற்றங்களையும், வளர்ச்சிகளையும், பல பின் இணைப்புகளையும் கொண்டுள்ளது.

நாம் இப்பொழுது நிறைவேற்றி இருக்கின்ற ஆலயப் புனரமைப்புப் பணி என்பது நமது ஆலய வரலாற்றில் நான்காவது முறையாகும். 1926 – 1927-ஆம் ஆண்டுகளில் பாடகர் குழு மற்றும் ஆயர் அறையும், ஆலயத்திற்கு முன்பாக வராண்டாவும் (Porch) உருவாக்கப்பட்டது.

முதன் முறையாக 1933-ஆம் ஆண்டு நமது ஆலயம் புனரமைக்கப் பட்டு மின்சார விளக்குகளும், மின் விசிறிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1955-ஆம் ஆண்டு மீண்டும் ஆலயம் புதுப்பிக்கப்பட திட்டமிடப்பட்டு 1959-ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டது. புதிய விளக்குகள் பொருத்தப்பட்டன. இதற்காகச் செலவு செய்த மொத்தத் தொகை ரூ.25,000/- இந்தக்காலத்தில்தான் (1955-1959) நம் திருச்சபையில் புதிய தரை அமைக்கப்பட்டது. மேலும் இந்தக் காலத்தில்தான் நம் இரு Altar களும் புதிதாகச் சேர்க்கப்பட்டன. 1. Children Altar, Left side, இயேசுவின் இளம் வயதை விளக்கும் ஒன்று 2. Lady’s Altar, right side இதற்கான மொத்தச் செலவு ரூ.250/-

மூன்றாவது முறையாக 1972-ஆம் ஆண்டு ஆலயம் மீண்டும் உட்புறம், வெளிப்புறம் புதுப்பிக்கப்பட்டு புதிய ஒலிபெருக்கிச் சாதனம் மற்றும் விளக்குகள் போடப்பட்டன. இந்தப்பணி ரூ.55,000/- செலவில் இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று 1972-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் கடவுளுக்கு மகிமையாக இறை ஒப்படைப்பு செய்யப்பட்டது,

மேலும் 1980-ஆம் ஆண்டு நமது ஆலயம் விரிவாக்கம் செய்யப்பட்டு இறைஒப்படைப்பு செய்யப்பட்டது, மீண்டும் நான்காவது முறையாக பத்துக்கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது என்பது நம் வரலாறு மட்டுமல்ல, கடவுள் அவருடைய கிருபையை நம் ஆலயத்தின் மீது அதிகமாய் வைத்துள்ளார் என்பதனையும், அதனால் நம் திருச்சபை பல மடங்கு இன்று வளர்ந்திருப் பதையும் நாம் சாட்சியாகக் கூறலாம்.

**கடந்து வந்த பாதை**

கடவுளின் பெரிதான கிருபையால் 1.6.2022 அன்று தூய பவுல் ஆலயமாகிய நமது ஆலயத்தில் ஆயராகப் பொறுப்பேற்றேன். அன்றைய நாளிலேயே நம்முடைய ஆலயப் புனரமைப்பு பற்றிய செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுற்றேன். இவ்வாலயத்தில் இதற்குமுன் பணியாற்றிய அருள்திரு. **ஃபிரீடி பாஸ்கரன்** அவர்கள், இதற்கான முன் ஆயத்தங்களை மேற் கொண்டிருந்தது பாராட்டுக்குரியது. ஆலயப் புனரமைப்புத் திருப்பணியை

முன்னிட்டு, நமது ஆலயமும், ஆலய வளாகமும் திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்வுகள் நடத்தத் தடை செய்யப்பட்டிருந்ததை அறிந்தேன். ஆனால் புனரமைப்பு செய்வதற்காக CMDA மற்றும் பேராயர் அனுமதி அப்பொழுது கோரப்படாமலிருந்தது.

நான் ஆயராகப் பொறுப்பேற்ற சில நாட்களில் இதற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன. அதற்காக ஆலயப் புனரமைப்புக்காக ஆயர் தலைமையில் புதிதாகப் புனரமைப்புக் குழு ஒன்று அமைக்கப் பட்டது. அக்குழுவில் கலந்து ஆலோசித்த பின்னர் புனரமைப்பிற்கான அனுமதி பெற CMDA மற்றும் பேராயத்திற்கு முறையாக விண்ணப்பிக்கப் பட்டன. Kingsway Consultant, இந்தப் புனரமைப்புப் பணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டனர். அதே நேரத்தில் ஆலயத்திற்கு வருவாய் வரும் வகையில், ஆலயப் பணி தொடங்கும் வரை திருமணம் மற்றும் இதர நிகழ்வுகள் ஆலய வளாகத்தில் மீண்டும் அனுமதிக்கப்பட்டன.

இப்பணியில் CMDA மற்றும் பேராய அனுமதி பெற ஆயருக்கு மிகவும் உறுதுணையாக இருந்த முன்னாள் செயலர் திரு.**P. எபிநேசர்**, பொருளர் **T.S.இராஜசேகர்** மற்றும் அப்போது சேகரக்குழுவில் உறுப்பினராயிருந்த திரு.**ரவிகுமார் டேவிட்**, Kingsway Consultant, திரு.**R.பென்ஜமின் ராஜாசிங்** ஆகியோரின் கடின உழைப்பை நான் என்றும் மறக்க முடியாது.

மழை, வெயில் என்றும் பாராமல் புனரமைப்புப் பணிக்கான நிதி திரட்டுதல், அனுமதி பெறுதல் ஆகியவற்றில் ஆரம்பம் முதலே ஆயரோடு சேர்ந்து திருச்சபை அன்பர்களைச் சந்தித்து ஒரு கோடிக்கும் மேலான நிதியை ஆலயத்திற்குப் பெற்றுத் தந்ததில் அவர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன் முதலாக நம்முடைய ஆலயப் புனரமைப்புக்கான Foundation stone 19.9.2022 அன்று அப்போதையப் பேராயர் பேரருட்திரு. **ஜார்ஜ் ஸ்டீபன்** அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அப்பொழுது திரு.**P.எபிநேசர்** குருசேகரச் செயலராகவும், திரு.**T.S.இராஜசேகர்** குருசேகரப் பொருளராகவும் இருந்தனர்.

அதே நேரத்தில் கடவுளின் பெரிதான கிருபையால் நம்முடைய ஆலயத்திற்கு நிதி உதவி அளிக்க நமது தமிழ்நாடு சட்ட சபையில் 2024-ஆம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் தமிழக பட்ஜெட் உரையின்போது ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் யாரும் சற்றும் எதிர்பார்க்காத விதமாக ரூபாய் **4,02,15,000/-** தமிழக அரசின் சார்பாக நன்கொடையாக நம்முடைய ஆலயப் புனரமைப்புக்காகக் கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்குப் பெரும் உதவியாக இருந்த தமிழக அரசின் முன்னாள் சிறுபான்மைத் துறைத்தலைவர் மரியாதைக்குரிய திரு.**பீட்டர் அல்போன்ஸ்** ஐயா அவர்கள் பங்கை நாம் மறக்க முடியாது. இதற்குத் தொடக்கப்புள்ளியாக இருந்து மதிப்பிற்குரிய பீட்டர் அல்போன்ஸ் அவர்களை ஆயருக்கு அறிமுகப்படுத்தி, தொடர்ந்து இந்த நிதி பெற உதவி செய்த நமது திருச்சபை உறுப்பினர் Adv. **R.C.பால் கனகராஜ்** ஐயா அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது துரிதமாக நிறைவேற்றப்பட பெரிதும் உதவியாக இருந்த அன்றைய சிறுபான்மைத்துறை அமைச்சரின் தனிச் செயலர் திரு.**அன்பழகன்** அவர்களின் முயற்சியும் பாராட்டுக்குரியது. அரசாணையை உடனே நடைமுறைப்படுத்துவதற்கு உதவிசெய்த அப்போதைய சிறுபான்மைத் துறை அமைச்சர்மாண்புமிகு.**செஞ்சி மஸ்தான்** அவர்களின் பங்களிப்பையும் அவர்கள் எங்களை அன்போடு அவர்கள் இல்லத்திற்கு அழைத்து, எங்களுக்குக் காலை உணவைப் பரிமாறின அன்பு என்றென்றும் நினைவு கொள்ள வேண்டியவை



மாண்புமிகு முன்னாள் அமைச்சர் மாண்புமிகு **செஞ்சி மஸ்தான்** அவர்களும், அவரின் தனிச் செயலர் திரு.**அன்பழகன்** அவர்களும் நமது ஆலயத்தைப் பலமுறை பார்வையிட்டு, மிகக் குறுகிய காலத்தில் நமது ஆலயத்திற்கு நிதிகிடைக்க பெரிதும் உதவியாக இருந்தார்கள். அவர்களுக்கு என் நன்றிகள் பலவற்றைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.





தலைமைச் செயலக அலுவலகத்தில் இம்முயற்சிகள் மேற் கொண்டிருக்கும் அதே நேரத்தில் சென்னை மாநகரின் ஆட்சியரின் பங்கையும், மாவட்ட சிறுபான்மை நலத்துறை அதிகாரி மதிப்பிற்குரிய திரு.**இளங்கோ** அவர்களின் பங்கையும் என்னால் மறக்க முடியாது. திரு. இளங்கோ அவர்கள் ஒரே நாளில், ஒரே நேரத்தில் நம்முடைய வட்டார தாசில்தார், மாவட்டத் தலைமை நில அளவு அதிகாரி (District Chief Survivor) மற்றும் Executive Engineer (EB) ஆகியோரை அழைத்துவந்து அனைத்து தேவைகளையும், ஒரே நாளில், ஒரே நேரத்தில் பூர்த்தி செய்த உதவியை வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது, குறிப்பாக இவர்கள் அனைவரும் பிறசமய நண்பர்கள் என்பதும், கிறிஸ்தவர்கள் அல்லாத வர்கள் என்பதும் மிக முக்கியமானதாகும்.

மேற்குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் முதற்கொண்டு, கடைநிலை ஊழியர்கள் வரை அனைவரும் எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி முழு ஒத்துழைப்பு கொடுத்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

தலைமைச் செயலகம், மாநில சிறுபான்மையினர் நல வாரிய அலுவலகம், மற்றும் சென்னை மாநகர ஆட்சியர் அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்களுக்கும் பல நாட்கள் சென்று பல மணிநேரம் செலவிட்டு இம்மூன்று அலுவலகங்களையும் ஒன்றிணைத்து, மூன்று அலுவலகத்திலுள்ள கோப்புகளையும் நகர்த்தி, வெற்றியடையச் செய்வது சாதாரணமான காரியமல்ல. இப்பணியில் ஆயரோடு இணைந்து மேற் கண்ட மூன்று அலுவலகங்களுக்குத் தொடர்ச்சியாகச் சென்று இக்காரியத்தை முடிக்கப் பெரும் பங்காற்றிய நம்முடைய Property Finance Committee Convenor திரு.**ஜார்ஜ் வில்சன்** அவர்களை நான் வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பலநாட்கள் பகல், இரவு என்று பாராமல் ஆயரோடு இணைந்து செய்த திருப்பணியை என்னால் மறக்க முடியாது. அதே நேரத்தில் ஆயரோடு இப்பணியில் தன்னை இணைத்துக் கொண்ட சேகரச்செயலர் திரு.**பால் ஜெயக்குமார்** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயப் புனரமைப்புப் பணி செய்வதற்குத் தகுதியானவர்கள் புராதனக் கட்டிடத்தைப் (Heritage) புனரமைப்பவர்களே இப்பணியைச் சரியாகச் செய்ய முடியும் என்ற பரிந்துரைக்கேற்ப, பேராயத்தை அணுகியபோது, தூய பவுல் ஆலயத்தில் ஆயரே ஒரு சிறந்த Heritage Consultant-ஐ அழைத்து வரும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி நாங்கள் ஒரு குழுவாகத் தஞ்சாவூர், நாகப்பட்டிணம், தரங்கம்பாடி, பாண்டிச்சேரி மற்றும் சென்னையிலுள்ள பல இடங்களிலுள்ள Heritage கட்டிடங்களைப் பார்க்கச் சென்றோம். இறுதியில் நமது சென்ட்ரல் இரயில் நிலையம் அருகே விக்டோரியா ஹாலில் இப்பணியைச் செய்து வந்த மும்பையைச் சேர்ந்த Savani Heritage Construction என்ற நிறுவனத்தினரைச் சந்தித்து அவர்களைப் பேராயத்திடம் அறிமுகம் செய்து வைத்தோம். அதன்பின்

பேராயப் பொறியியல் துறையின் மூலமாக (Engineering Department) பேராய நெறிமுறைகளின்படி இப்பணி தொடங்கப்பட்டது.

ஆலயப் பணி ஆரம்பிப்பதற்கு முன்பாக நமது ஆலயவழிபாட்டைத் தூய பவுல் அரங்கத்திற்கு மாற்றவும், மேலும் தூய பவுல் அரங்கத்திற்கு வெளியே கொட்டகை (Shed) போட்டுக் கொள்ளவும் பேராயத்திடம் அனுமதி கோரினோம். பேராயமும் மேற்குறிப்பிட்ட இரண்டிற்கும் உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் அனுமதி கொடுத்தனர். அனுமதி கொடுத்த முன்னாள் சென்னைப் பேராயப் பொறுப்புப் பேராயர் **பேரருள்திரு. சர்மா நித்தியானந்தம்** அவர்களுக்கும், சென்னைப் பேராயத்தின் உபதலைவர் **அருள்திரு.C.ஜெயசீலன் ஞானாதிக்கம்** அவர்களுக்கும், பேராயத்தின் செயலர் **அருள்திரு.S.அகஸ்டின் பிரேம்ராஜ்** அவர்களுக்கும், பேராயத்தின் பொருளர் **முனைவர் J.சாமுவேல் கொர்னேலியஸ்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடவுளின் பெரிதான கிருபையினால் 11.7.2024 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு.**செஞ்சி மஸ்தான்** அவர்களிடமிருந்து ரூ.2,01,7,500/-யை முதல் தவணையாகப் பெறக் கடவுள் கிருபை கொடுத்தார்.



இத்தனை முயற்சிகளுக்கும் பிற்பாடு கடவுளுடைய பெரிதான கிருபையினால் நம்முடைய ஆலயப் புனரமைப்புப் பணி 19.9.2024 அன்று அப்போதைய சிறுபான்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.**செஞ்சி மஸ்தான்** அவர்களால் துவங்கப்பட்டது. இத்துவக்க விழாவில் மாண்புமிகு அமைச்சரோடு இணைந்து, அரசின் சார்பாகச் சிறுபான்மைத் துறை இயக்குநர் திருமதி.**மு.ஆசியா மரியம்** IAS அவர்களும், மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை.**ஜோ அருண்** அவர்களும் சிறுபான்மை நலத்துறை அமைச்சகத்தின் முதன்மைச் செயலர் திரு.**விஜய் இராஜ்குமார்** IAS அவர்களும், மாவட்ட சிறுபான்மை நல அதிகாரி திரு.**சரவணன்** அவர்களும், மேலும் சில அரசு அதிகாரிகளும் இதில் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர்.







நமது பேராயத்தின் சார்பாகப் பேராய உபதலைவர் அருள்திரு. **C.ஜெயசீலன் ஞானாதிக்கம்**, செயலர் அருள்திரு.S.**அகஸ்டின் பிரேம்ராஜ்**, பொருளர் முனைவர் **சாமுவேல் கொர்னேலியஸ்** ஆகியோரும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். மேலும் நமது ஆலயத்தைச் சுற்றியுள்ள TELC, Methodist மற்றும் கத்தோலிக்கத் திருச்சபை ஆயர்களும், நமது முன்னாள் ஆயர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆலயப் புனரமைப்புப் பணியின்போது தற்போதைய மாநில சிறுபான்மைத்துறை அமைச்சர் **மாண்புமிகு நாசர்** அவர்கள் ஆலயத்தை மேற்பார்வையிட்டார்கள். மேலும் இப்பணியின்போது நமது முன்னாள் பேராயர் பேரட்திரு.**அறிவர் தேவசகாயம்** ஐயா அவர்களும், நம்முடைய ஆலயத்தின் முன்னாள் ஆயரும், தற்போது நமது பேராயருமாய் உள்ள பேரருட்திரு.**A.பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** ஐயா அவர்களும் பார்வையிட்டு பல ஆலோசனைகள் வழங்கினார்கள்.







இப்பணி துவங்கப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும், காலை முதற்கொண்டு மதியம் வரை இந்தப் புனரமைப்புப் பணிக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூடுகையில் திருச்சபை Restoration committee உறுப்பினர்கள், சவானி குழுவினர், Kingsway Consultant திரு.R.பென்ஜமின் அவர்கள் குழுவினர் Cuboid Consultant மற்றும் பேராயப் பொறியியல் துறை (Diocesan Engineer Department) ஆகியோர் கலந்து கொண்டு, திட்டமிடுதல் மற்றும் திறனாய்வுப் பணியையும் செய்து வந்தோம். மிக முக்கியமான தீர்மானம் எடுக்கும் கூடுகையில் சேகரக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ரூபாய் 4.5 கோடி திட்ட மதிப்பீட்டில் துவங்கப்பட்ட இப்பணியானது நிறைவடையும் போது கிட்டத்தட்ட பத்து கோடியை நெருங்கியி ருக்கின்றது. காரணம் பழைய கட்டிடத்தைப் புனரமைப்பதினால் துல்லிய மாகச் செலவினை முன்கூட்டிக் கணிக்க முடியவில்லை. உறுதித் தன்மையுடன் கட்டிடம் இருக்க வேண்டும் என்றும் மேலும் அடுத்த நூறு ஆண்டுகளுக்குத் திட்டமிட்டதால் மதிப்பிடப்பட்ட தொகையிலிருந்து அதிகத் தொகை செலவிடப்பட்டுள்ளது.

மிக முக்கியமாகக் கட்டிடப் புனரமைப்புப் பணி தொடங்கும் முன், கட்டிடம் அனைத்து NDT Test செய்யப்பட்டது. இந்தச் சோதனையால் கட்டிடத்தின் உறுதித் தன்மை, மேல்தளத்தின் உறுதித்தன்மை, Trusses உறுதித்தன்மை, Purlin உறுதித் தன்மை, அடித்தளத்தின் உறுதித்தன்மை மற்றும் Rafters ஆகியவற்றின் உறுதித்தன்மை முழுமையும் கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில், தவிர்க்க முடியாத, திட்டத்தில் (பட்ஜெட்) இல்லாத கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

Grouting – கட்டிடத்தின் செங்கல்களுக்கிடையே உள்ள ஓட்டையை (துவாரத்தை) அடைத்தல், கட்டிடம் உள்ளேயும், வெளியேயும் முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளன.





Brick consolidation–கட்டிடத்தின் செங்களுக்கிடையே சம நிலையைக் கொண்டுவருதல்-கட்டிடத்தின் இருபுறமும் நிறைவேற்றப் பட்டுள்ளன.




கட்டிடத்தை முழுமையாகத் தாங்கி நிற்கும் நான்கு பெரிய Truss யில் மூன்று சோதனையில் தோல்வியுற்றதால் மூன்று பெரிய truss செய்து கிரைன் மூலம் இறக்கி, ஏற்றி பொருத்தப்பட்டன.







நான்கு Truss-க்களை இணைக்கும் எட்டு Purlin யில் நான்கு, சோதனையில் தோல்வியுற்றதால் நான்கு புதிதாக Purlin செய்யப்பட்டன.



சோதனையில் 330 Rafters–யும் தோல்வி அடைந்ததால் 330 Rafters - யும் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் நமது ஆலயம் பழமை மாறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக 22 ஜன்னல்களும் புதிதாக Louvers ஜன்னல்களாக மாற்றப்பட்டன.



நமது ஆலயத்துக்கு மேல் பகுதியில் உள்ள 22 வென்டிலேட்டரும் பழமை அடைந்து, பயனற்றுப் போனதால் இவை அனைத்தும் புதிதாக மாற்றப்பட்டுள்ளன.

ஆலய முகப்பு முக்கிய கதவு புதிதாகச் செய்யப்பட்டு, மற்ற கதவுகள் அனைத்தும் புனரமைக்கப்பட்டுள்ளன.



நமது ஆலயம் மிக அழகாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் நமது ஆலயம் முழுவதும் உள்பக்கத்தில் மேல்கூரை முழுவதும் false ceiling முதல்தர தேக்கு மரத்தால் பொலிவூட்டப்பட்டுள்ளன.




மழைநீர், சுவற்றில் நேரடியாக இறங்காமல் இருக்க நமது ஆலயக் கட்டிடத்தைச் சுற்றி மேல் பகுதியில் கிரானைட் கல்லால் lintal போடப்பட்டு அதன்மீதுதான், Truss, மற்றும் Rafters வைக்கப்பட்டுள்ளன.





மேலும் நமது கட்டிடத்தை வலுப்படுத்த ஆறு தனித்தனி இடங்களில் Madras Roof புதிதாகப் போடப்பட்டுள்ளன.






மிக முக்கியமாக மேல்தளம் முழுமையாக அகற்றப்பட்டுப் புதிய மேல்தளம் அமைக்கப்பட்டுள்ளது.





ஆலயத்தை இன்னும் அழகுபடுத்த Stain Glass ஒன்பது இடங்களில் சுமார் முப்பது இலட்சம் மதிப்பில் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன. Stain Glass அனைத்தும் திருச்சபைக் குடும்பங்களாகக் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.





மேலும் ஆலயக் கட்டிடத்தை எப்பொழுதும் குளுமையாக வைக்க Wall Punni செய்யப்பட்டது.




இப்பணிகள் தவிர, நமது ஆலயம் முழுவதுமாக புதிய அழகான தரை (Granite) கற்களால் ஒரு குடும்பத்தினரால் அன்பளிப்பாக அளிக்கப் பட்டுள்ளது.





நம்முடைய ஆலயத்தில் 22 கல்வெட்டுகள் உள்ளன. இவற்றில் அநேகம் பழுதடைந்திருந்தன. நம்முடைய திருச்சபை வரலாற்றில் முதன் முறையாக கல்வெட்டுக்களை மீட்டெடுக்கும் ஒரு வல்லுநரை அழைத்து அவர் தலைமையில் அனைத்துக் கல்வெட்டுக்களும் புதுப்பிக்கப்பட்டு தற்பொழுது புதிய பொலிவைப் பெற்றுள்ளன.






நம்முடைய ஆலயத்தில் பயன்பாட்டிலுள்ள, மக்கள் அமரும் நாற்காலிகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு, மீண்டும் புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவடைந்துள்ளன.

மேலும் நமது ஆலயத்திலுள்ள 120 Kneelers அனைத்தும் சரி செய்யப்பட்டு, அனைத்திற்கும் புதிய Cushion பொருத்தப்பட்டு ஒரு புதுப் பொலிவைப் பெற்றுள்ளன.





நம்முடைய ஆலய ஆல்டர் 168 ஆண்டுகளுக்கு முன்பாக வடிவமைக்கும் பொழுது சுமார் 100 பேர் மட்டுமே நம் திருச்சபையில் இருந்திருக்கலாம். ஆனால் தற்பொழுது நம்முடைய திருவிருந்தில் சுமார் 800 முதல் 1000 பேர் வரை ஒரு வழிபாட்டில் பங்கு பெறுகின்றனர்.ஆலயப் புனரமைப்புக்கு முன்பு திருவிருந்தில் ஒரு பந்தியில் 10 முதல் 15 பேர் வரை மட்டுமே பங்குபெற முடியும். இதனைக் கருத்தில் கொண்டு நம்முடைய ஆலய ஆல்டரில் இறைமக்கள் திருவிருந்து எடுக்கும் இடம், விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது, இனி ஒரு பந்தியில் 25 முதல் 30 பேர் வரை பங்கு பெறலாம்.

நமது ஆலயத்தில் பழுதடைந்திருந்த பைப் ஆர்கன் சரிசெய்யப்பட்டு மீண்டும் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இதற்கான செலவையும் ஒரு குடும்பத்தினரே ஏற்றுள்ளனர்.



நமது ஆலயப் பயன்பாட்டிற்காக ஒரு குடும்பத்தார் புதிய Pulfit ஒன்றைக் கொடுத்துள்ளனர்.

அதைப்போல் நமது ஆலயப் புராதானக் கட்டிடத்திற்கு ஏற்ப (Complete Lighting System) மின் விளக்குகளை ஒரு குடும்பத்தினர் காணிக்கையாகக் கொடுத்துள்ளனர்.

நமது ஆலயப் பயன்பாட்டிற்காகப் புதிய நவீன விலையுயர்ந்த ஒலிக்கருவிகளை (Complete Sound System) ஒரு குடும்பத்தினர் காணிக்கையாகக் கொடுத்துள்ளனர்.

CCTV – ஆலயம் முழுமையும் திருச்சபையிலுள்ள ஒரு குடும்பத்தின் சார்பாக நன்கொடையாகப் பொருத்தப்பட்டுள்ளது.

ஆலயப் பயன்பாட்டிற்காக நான்கு ஏ.சி.திருச்சபை மக்களால் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலய நிகழ்வுகளைச் சபையார் பார்க்க, எட்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் திருச்சபை மக்களால் கொடுக்கப்பட்டுள்ளன,

Main Alter Railing – ஒரு குடும்பத்தால் ஆலயத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளது.

ஆலயத்தில் அனைத்து louver windows சபையார் நன்கொடையால் பெறப்பட்டுள்ளன.

ஒரு குடும்பத்தார் புதிதாக Main Door – ஐப் பொருத்தியுள்ளனர்.

மற்றொரு குடும்பத்தார் அனைத்துக் கதவுகளையும் சரிசெய்து மீண்டும் பொருத்துவதற்கான முழுச் செலவையும் ஏற்றுள்ளனர்.

மேலும் ஒரு குடும்பத்தார் 28 Fan Bracket – ஐ நன்கொடையாகக் கொடுத்துள்ளனர்.

ஒரு குடும்பத்தார் மின்விசிறி அனைத்தையும் நன்கொடையாகக் கொடுத்துள்ளனர்.

நம்முடைய அன்புக்குரிய பேராயர் அவர்கள் 21.03.2026 அன்று நம்முடைய ஆலயத்தை முழுமையாக ஆய்வு செய்து பல ஆலோசனைகளை வழங்கி இன்று நம்முடைய பணி சிறப்பாய் முடிவு பெற உதவி செய்துள்ளார்.

மேலும் அன்று சிறப்பு இறை வேண்டலும் புனரமைப்பு செய்யப்பட்டு வரும் நமது ஆலயத்தில் சிறப்பு ஜெபத்தையும் ஏறெடுத்தார். பேராயர் ஐயா அவர்களுக்கும் பேராயர் அம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.






மிக முக்கியமாக, நம்முடைய திருச்சபையாரின் உணர்வோடு ஒட்டியுள்ள நம் ஆலயத்தின் உணர்வுகளை இன்னும் மெழுகேற்றுகின்ற வண்ணம், கடந்த 168 ஆண்டுகளாக நம் ஆலயத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த மரங்களைக் கொண்டு சிலுவைகளைத் தயார் செய்து, அதனை நம் திருச்சபை மக்களின் இல்லங்களுக்குக் கொடுப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சிலுவைகளைத் தயார் செய்வதற்கான வேலையாள் கூலியின் ஒரு சிறிய பகுதியை நம் திருச்சபைக் குடும்பம் பொறுப்பேற்று உள்ளதற்காக ஆண்டவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆலயப் புனரமைப்புப் பணியை நினைவுகூறும் வகையிலும், எதிர்காலத் தலைமுறைகளும் இவற்றை நினைவுகூற வேண்டும் என்பதற்காக Souvenir Committee உருவாக்கப்பட்டது. இதில் சுமார் ஐம்பது பேர் உள்ளனர். இவர்கள் குழுவாக ஒன்றிணைந்து பணியாற்றி, இவ்விழா மலரை வெளிக்கொண்டுவரப் பெரிதும் உதவினர். இவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக முக்கியமாக இதில் முக்கியப் பங்கு வகித்த திரு.**ரவிக்குமார் டேவிட்** அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இதற்காகச் சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்பட்டு வருகின்றது. இதில் அநேகர் கலந்து கொண்டு ஜெபித்து வருகின்றார்கள். மிக முக்கியமாக இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பெண்கள் ஐக்கிய சங்கம், ஆண்கள் ஐக்கிய சங்கம், ஓய்வுநாள் பள்ளி, வாலிபர் ஐக்கிய சங்கம் மற்றும் பாடகர் குழு உறுப்பினர்களுக்கும் அதன் பொறுப்பாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு தீர்மானம் எடுப்பதிலும் அதை நடைமுறைப் படுத்துவதிலும் ஆயருக்குத் துணையாக நின்ற சேகரச்செயலர் **திரு.W.பால் ஜெயக்குமார்**, பொருளர் **திரு.R.ஆரோன் ஜஸ்டின்** மிக முக்கியமாகப் Property Committee Convener **திரு.ஜார்ஜ் வில்சன்** மற்றும் சேகரக்குழு உறுப்பினர்கள் Restoration Committee உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பார்ந்த திருச்சபை மக்கள் உங்கள் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களுடைய உதாரத்துவமான காணிக்கைகளாலும், ஊக்கமான ஜெபத்தாலும் மட்டும்தான் நாம் இந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்ற முடிந்தது.

நான் சிறுவனாக இருந்த பொழுது ஆண்டவர் எனக்குக் கொடுத்த வாக்குத்தத்தம்:

**"உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல: ஆனால் எனது ஆவியாலே ஆகும், என்கிறார் படைகளின் ஆண்டவர்" (செக்கரியா 4:6).**

இந்த வாக்குத்தத்தத்தின் மூலமாகத்தான் இந்தப் பணியை ஆண்டவர் நிறைவேற்றி உள்ளார். இது நம்முடைய பலம், ஞானம், முயற்சி என்பதனை விட கடவுளின் கிருபையால்தான் நடந்தது என ஆண்டவரின் ஊழியனாக முழுமையாக நம்புகின்றேன். அவருடைய கிருபை இல்லையென்றால் இது கண்டிப்பாக நிறைவேறி இருக்க வாய்ப்பில்லை.

இந்தக் கட்டிடப் புனரமைப்பணி தொடங்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை ஆண்டவரின் கிருபையை, வழிநடத்துதலை என்னால் உணர முடிந்தது, மழையோ, வெயிலோ இதனைச் சேதப்படுத்தவில்லை. பணம் இல்லை என்று ஒருநாளும் கட்டிட வேலை நிற்கவும் இல்லை. ஆண்டவரே இந்தப் பணியை நிறைவேற்றிக் கொடுத்துள்ளார். ஆண்டவர் நம் தூய பவுல் ஆலயத்தை நேசிப்பதினால் ஆண்டவரே நமது அரசிடமிருந்து ரூபாய் 4 கோடியைப் பெற்றுத் தந்து இந்தப் பணியைத் தொடங்கி இன்று முடித்துள்ளார்.

இதில் என்னையும் ஒரு கருவியாக ஆண்டவர் பயன்படுத்தியமைக்காக என் உளமார்ந்த நன்றிகளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே தெரிவித்துக் கொள்கின்றேன். எனக்கு எல்லா நிலைகளிலும் நல்ல ஆலோசகராகச் செயல்பட்டுவரும் என் மனைவி திருமதி.**G.மங்களம் சாமுவேல்** அவர்களுக்கு என் நன்றி. நமது ஆலயத்தை அழகாக 3D view செய்து என்னை ஆச்சரியப்படுத்தின என் மகள் **S. கிறிஸ்டில்டா** அவர் களுக்கு என் நன்றி. என்னை ஜெபத்தில் தாங்கி வருகின்ற என் மகன் திரு.**S.ஆண்ரூ ஜோயல்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்தத் திருப்பணியில் மொழி பெயர்ப்பதிலும், அச்சுப் பிழை பார்ப்பதிலும், எழுதுவதிலும் எனக்கு உதவியாயிருந்த **டாக்டர். ஸ்வீட்ன் பிரபாகரன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொடர்ந்து நம்முடைய பணி தொடரட்டும். இணைந்து இறையரசைக் கட்டுவோம் ஆண்டவரின் கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் கூட இருப்பதாக. தொடர்ந்து எனக்காக, என் ஊழியத்திற்காக, என் குடும்பத்திற்காக ஜெபிக்கும்படி அன்பாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

இறைபணியில்,

உங்கள் அன்பு ஆயர்
அருள்திரு. **S. சாமுவேல்**
சேகரத் தலைவர்
சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம்
சூளை, சென்னை 600 112
26.4.2026